ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

09.04.2026

1. பாரெங்கும் பசிபிணி விரட்டும்
பரோபகாரமிக்க தரும சாலை
பிரணவக் குடில் உலகை மாற்றும்
பிரபஞ்ச ஞான சபையாக இருக்க

2. இருக்கவே ஏழாம் படை வீடாம்
எந்தன் ஞானபீடம் நோக்கி
கருத்தாக உலகோர் வருகைதர
கடைத்தேற்றம் பெறுவர் எனக் கூறி

3. கூறியே ஆறுமுக அரங்கன் யான்
குறைவிலா விசுவாவசு சேல்திங்கள்
நிறைவான கடைகுருவார அருளாசியாக
நிகழ்த்திடுவேன் உலகோர் நலம்பெற

4. நலம்தரும் என் பீடம் வருக
ஞானபலம் தானபலமும் கூடி
வலம் வருவர் ஞானிகள் ஆசி
வல்லமை கொண்ட மக்களாக

5. ஆகவே என் பீடம் அன்னதானம்
அருமருந்தாக விளங்கிட
வகைபட உலகோர் வந்து
வணங்கி உண்ண அவரவர்

6. அவரவர் வாழ்வில் வசந்தம் கூடி
ஆக்கினை பிணி சோடை விலகி
அவணியில் ஆபத்து கண்டமில்லா
ஆயுள் கூடி அவரவரும் சிறப்பர்

7. சிறப்புதரும் அன்னதான பலமுற
சேவை வழி அவரவர் தானும்
மறுப்பின்றி பொருளுதவி செய்து
மாதருமவான் எனும் பலம் பெற

8. பலம்பெற கலியினில் ஞானிகள்
பார்வை கூடி அவரவரும்
வலம் வருவர் ஞானிகளாகவே
வருகின்ற பராபவ தகர் திங்கள்

9. திங்கள் தொட்டு என் பீடம்
தெய்வ பலமிக்க சக்தி நிலை
ஓங்கார சோதி வழி மிகுந்து
உயர் பூசை கலந்து வருகின்ற

10. வருகின்ற யாவர்க்கும் தன்னை
வந்த நோக்கம் அறிகின்ற வண்ணம்
அறிவு தெளிவு திடம் வழங்கி
ஆளுமையே ஞானவழி வரும்படி

11. வரும்படி அற்புதம் நிகழ்த்துவேன்
வரம் தரும் அருளாசி மூலம்
தருவேன் இன்னும் பல சூட்சுமம்
தவசி யானுரைத்த குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி